தான் அவர்கள் கட்சியின் நிலை, கட்சியின் இலட்சியம் என்று இருக்குமானுல், மிக்க மகிழ்ச்சியோடு உமாநாத் அவர்களின் கருத்துக்களை வரவேற்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்க இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதால் அனுமதி மறுக்கிறேன்.

4. தகவல் கோரல்.

(அ) உறுப்பினர் திரு. ர. ஜெபமணி வெளியில் தாக்கப்பட்டதாக வந்துள்ள பத்திரிகைச் செய்தி குறித்தும், அவருக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமா என்பது குறித்தும்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, இன்றைய தினம் காலைப்பத்திரிகையில் ஒரு பயங்கரமான செய்தி வந்து இருக்கிறது. தமிழக சட்ட மன்ற உறுப்பினர் பயங்கரமாகத் தாக்கப்பட்டு இருக்கிருர். அவர் வயதில் பெரியவர் என்ற காரணமாக இங்கே எல்லோரும் அவரைத் தாத்தா என்று அன்போடு அழைக்கிறோம், அவர் அந்த அளவுக்குத் தாக்கப்பட்டு, உடல்நிலை சரியில்லாமல் இருக்கிருர். அவர் மேலும் தாக்கப்படாமல் இருக்கும் பொருட்டு அவருக்குப் போலீஸ் பாதுகாப்புக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ? (குறுக்கீடு) அவர் பெயர் ஜெபமணி.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர் ஜெபமணி தாக்கப்பட்டதாகக் கூறினுர்கள். எமர்ஜென்சி காலத்தில் சிறையில் இந்திராகாந்தியின் தூண்டுதலின் பேரில், பட்ட அடியைவிட நேற்றைய தினம் பட்டது ஒன்றும் இல்லை அங்கே தான் அடிபட்டேன், நேற்றைய தினம் அடி ஒன்றும் இல்லை என்று அவர்கள் கூறினுர்கள் என்பதை தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் அடிபடவில்லை என்று அவர் கட்சித் தலைவர் சொல்லிய காரணத்தால், இதில் பிரச்சனை ஒன்றும் இல்லை.

இப்போது, திரு. வ. துலுக்காணம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு பிரச்சனையைக் கொண்டுவருவார்கள்.